திரு. எஸ். ஆர். இராதா: பாயின்ட் ஆப் ஆர்டர். பேரவைத் துணைத் தலைவரவர்களே, குரல் வாக்கெடுப்பு நடந்து கொண்டிருக்கிறது. வாக்கெடுப்பின் போது ஒவ்வொருவரும் அவரவர்களுடைய இருக்கையிலே இருந்து அளிக்கும் வாக்கைக் குரல் மூலம் பதிவு செய்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் இடம் மாறி உட்கார்ந்து கொண்டு, அவருடைய குரலைப் பதிவு செய்து கொண்டிருக்கிறார். (சிரிப்பு)

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, அவருக்குப் பக்கத்திலே இரண்டு மூன்று நண்பர்கள், வின்சென்ட், மணிமாறன் எல்லாம் உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்களுடைய இடம் அதுவல்ல. மாண்புமிகு இராதா முதலில் தன்னுடைய முதுகைப் பார்த்து விட்டுப் பேசவேண்டும். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: துரை முருகன் வேறு பக்கத்திலே உட்கார்ந்தார். ஆனால் இராதா உங்கள் பக்கத்திலே 4, 5 பேரை வைத்திருக்கிறீர்கள். (சிரிப்பு)

முகப்புரை, நீண்ட தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, 'தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1978) சட்டமாக நிறைவேற்றப் பெற வேண்டும்.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

[பிற்பகல் 12-20]

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1978) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/1978) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கோருவார்கள்.